விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 079 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 24 சனிக்கிழமை (08.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை

## 35 வருடங்களின் பின்னர் நேற்று மீண்டும் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை 35 வருடங்களின் பின்னர் நேற்று மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக குறித்த தொழிற்சாலையின் பழைய இயந்திர சாதனங்கள் திருத்தம் செய்யப்பட்டு எதிர்காலத்தில் புதிய உபகரணங்களை கொள்வனவு செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## மயிலிட்டியில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மயிலிட்டி வைரவர் கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த

15ஆம் பக்கம் பார்க்க

சுவருக்கு வர்ணம் பூசியபோது

## கட்டிலிலிருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(வவுனியா)

கட்டிலின் மேல் ஏறி சுவருக்கு வர்ணம் பூசியபோது தவறிவிழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா பண்டாரிக்குளத்தில் நேற்று இச்சம்பவம் இடம்

15ஆம் பக்கம் பார்க்க



# வடக்கில் கைத்தொழிலை மேம்படுத்த நடவடிக்கை

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

(காங்கேசன்துறை)

வடக்கில் கைத்தொழிலை மேம்படுத்த விசேட நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும் எனக் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்



காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு நேற்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் இதனைத் தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## 14 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

(மன்னார்)

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 14 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 14 பேரும் மன்னாருக்குத் தெற்கே உள்ள கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

புதுக்குடியிருப்பில்

## 20 வயது இளம் பெண் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் 20 வயது இளம் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


இதில் அதே பகுதியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் தேவஸ்ரலா (வயது-20) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குடும்பத் தகராறு

15ஆம் பக்கம் பார்க்க

## அல் ஜசீரா நேர்காணலில் புலிகளின் அனுதாபிகள்

### ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அல் ஜசீரா நேர்காணலில் புலிகளின் அனுதாபிகள் காணப்பட்டனர் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்

15ஆம் பக்கம் பார்க்க

அமைச்சர்கள் குழாம்

## காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

அநுர அரசின் அமைச்சர் குழாம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு நேற்று வெள்ளிக்கிழமை நேரில் விஜயம் மேற்கொண்டு, தொழிற்சாலையை மீள இயக்குவது தொடர்



15ஆம் பக்கம் பார்க்க

## மூளாயில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மூளாயில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டினை மேற்கொண்ட சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

### உள்ளே

நாடறிந்த கட்டுரையாளர் அன்பு ஜவஹர்ஷா அவர்கள் எழுதிய

ஆசிரியர்களின் சம்பள உயர்வு சிறப்புக் கட்டுரை

14ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் போதையை இல்லாதொழிப்போம்

14 விசேட மையங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை

பிரதி அமைச்சர் சுனில் வட்டகல



03ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனடா விசாக்கள்

மீண்டும் ஓர் புதிய சந்தர்ப்பம்
இப்பொழுதே காலம்
தாழ்த்தமால்
விண்ணப்பியுங்கள்



## Canada Visit Visa

- Invitation letter/ Sponsor letter ஒழுங்கு செய்து தரப்படும்.
- உங்களிடம் அனைத்து ஆவணங்களும் இருந்தால் குறைந்த செலவில் விண்ணப்பித்து தரப்படும்.
- Hotel Booking செய்து தரப்படும்.
- கனடாவில் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
- ஆவணங்கள் கையளிக்கும் Appointment செய்து தரப்படும்.

(902)

13 வருடகால தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற Winstar visa Consultants உடன் இணையுங்கள்

கண்டிப்பாக முன்பதிவு செய்து நேரில் வரவும்

முன்பதிவுகளுக்கு - 071 071 6979

**Winstar Consultants Pvt Ltd**
**45, Vembadi Street, Jaffna.**


# வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள துயிலுமில்லங்களை விடுவியுங்கள்

## சபையில் ரவிகரன் எம்.பி கோரிக்கை

மாவீரர்களுடைய உறவுகளும் தமிழ் மக்களும் மாவீரர்களை விதைத்த இடத்தில் கண்ணீர் சிந்தி நினைவுகூருவதற்காக வடக்குக் கிழக்கில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மாவீரர்துயிலுமில்லங்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அமைச்சரும் பாராளுமன்ற சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை (07) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் இக்கோரிக்கையை விசேடமாக முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இறந்தவர்களை நினைவு கூருதலென்பது அந்தந்த சமயங்களுக்கேற்ப மக்கள் செய்து வருவது வழமையாகும். எங்களுடைய மக்கள் வடக்குக் கிழக்கில் நினைவுநாளாக நவம்பர்-27 அன்று துயிலுமில்லங்களிலும் மே-18அன்று முள்ளிவாய்க்காலிலும் நினைவு கூருவார்கள்.

கடந்தவருடம் உங்களுடைய ஆட்சியில் தடையில்லாமல் உணர்வுபூர்வமாக நவம்பர் 27 நாளினை நிம்மதியாக நினைவு கூர்ந்தார்கள். துயிலுமில்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். இராணுவத்தினர் எண்ணிக்கையும் வடக்குக் கிழக்கில் அதிகமாகவும் முல்லைத்தீவில் இன்னும் அதிகமாகவும் இரண்டு மக்களுக்கு ஒருபடையினர் என்று உள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தங்களுடைய உறவுகளை எண்ணி நினைத்து, ஒருசொட்டுக்கண்ணீர் சிந்தி, தமது மனத்தை ஆறுதல் படுத்துவதற்கு இராணுவம் அத்துமீறி கையகப்படுத்திவைத்துள்ள முள்ளியவளை, அளம்பில், தேராவில், ஈச்சங்குளம் உள்ளிட்ட துயிலுமில்லங்களை விடுவியுங்கள் எனக் கோரினார். (ம-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 08 - 1934



இறப்பு 06 - 03 - 2025

## திருமதி சின்னத்தம்பி இலட்சுமி (மிரியம்)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இலட்சுமி(மிரியம்) அவர்கள் 06.03.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகர் - சின்னத்தங்கம் தம்பதியனரின் அன்பு மருமகளும் சிவபாலன்(ஜேர்மனி), சிவராஜா(கனடா), சிவவாணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேஸ்வரி(ஜேர்மனி), கேமலதா (கனடா), சதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிளமென்ரா, டெனிசன், கிறிஸ்ரீனா, லுக்காஸ், ஆரதி, தூயன், ஆரூசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெசினா, கேப்ரியல் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை ஞாயிறு (09.03.2025) பிற்பகல் 2.00 மணியளவில் ஊரெழு மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் (மல்வம்) அப்போஸ்தலர் சேமகக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :

1. சிவபாலன் (ஜேர்மன்) : +491782009512, 077 034 6559 (இலங்கை)
2. சிவராஜா (கனடா) : +16475277726, 076 117 2274 (இலங்கை)
3. சிவவாணி (சுவிஸ்) : + 41783050415, 076 790 7965 (இலங்கை)
4. சதீஸ்வரன் (சுவிஸ்) : +41783146826

(3595)

# கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

## பகிரங்க ஏலம் விடுதல்

## ஆலய வயற்காணிகள் சிறுபோகம் - 2025

எமது ஆலயத்திற்குச் சொந்தமான பின்வரும் வயற்காணிகள் 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

1. மருதநகர் D4 - 2 ¼ ஏக்கர்
2. பெரியபரந்தன் LB2/ D.5 - 10 ஏக்கர்
3. பெரியபரந்தன் D7 - 8 ஏக்கர்

குறிப்பு

- ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறப்பட்டு மொத்தப் பெறுமதி கணிக்கப்படும்.
- ஏலத்தில் காணியைப் பெறுபவர்கள் அன்றைய தினமே காரியாலயத்தில் முழுப்பணத்தையும் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற வேண்டும். தவறின் அடுத்த ஏலம் கூறிய விவசாயிக்கு உரிமம் மாற்றப்படும்.
- காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.


ஆலய பரிபாலன சபை சார்பில்

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| ச.ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | சு.வரதராசா |
| 077 602 7147 | 077 540 7448 | 077 881 0184 |

(C-2405)

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## குமாரசாமி சங்கீர்த்தனன்



அன்பு மகனே சங்கீர்த்தா!
ஈரைந்து மாதங்கள்
உனைச் சுமந்து
இன்புற்று நாமெல்லாம்
இவ் உலகில் வாழ்வோம் என்றிருக்க

ஈரெட்டு ஆண்டு மட்டும்
இன்புற்று நீ இருந்து
இறுதி யாத்திரை போனதெங்கே?

கண்கெட்ட காலனவன்
கண்மூடி திறக்கமுன்னே
கவர்ந்திழுத்து சென்றானோ - எம் மகனை

நித்தமும் உனை நினைத்து
நிம்மதி இன்றி வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(968)

[illegible], கோம்பாவில்
[illegible]ருப்பு, முல்லைத்தீவு.

என்றும் உன் மீளா நினைவுகளுடன்...
குடும்பத்தினர் 077 552 8816

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்கில்

# போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்போம்

## வடக்கில் 14 விசேட மையங்கள் ஸ்தாபிக்க நடவடிக்கை

(கொழும்பு)

**போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் விசேட மத்திய நிலையத்தை வடக்கில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை குறைந்து ஏனைய போதைப் பொருள் பாவனை உயர்வடைந்துள்ளது அதனால் போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். கடந்த காலங்களில் அரசியல்வாதிகளுக்கும், போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது.

வரலாற்றில் முதல் தடவையாக போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.


போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளை நிறுவன மட்டத்தில் முன்னெடுத்துள்ளோம். கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்புக்களில் வடக்கில் மாத்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை 174 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப் பொருள் பாவனை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குவதற்காக 14 விசேட மையங்களை ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதே போல் வைத்தியசாலைகளில் போதைப் பொருள் தொடர்பில் தமிழ் மொழியில் விழிப்புணர்வுகள் வழங்கப்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் ஆணைக்கு அமைவாக போதைப்பொருள் பாவனையை முழுமையாக இல்லாதொழிப்போம் என அவர் தெரிவித்தார். (நி-8)

## மேலதிக வகுப்புக்களுக்கு தடை



(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை 3,663 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர, இந்த ஆண்டு 474,147 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற தகுதி பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்துடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை நடத்துவதற்கு எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-8)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்

# வடக்கு கிழக்கில் களமிறங்கும் மொட்டு



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும், பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

மேற்படி தேர்தலை எதிர்கொள்வதற்கான மொட்டுக் கட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசத்திடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்படி தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையிலுள்ள மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும் நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. மொட்டுச் சின்னத்தில் களமிறங்கவே எதிர்பார்க்கின்றோம்.

எனினும், வடக்கு, கிழக்கில் சிறு மாற்றம் வரலாம். பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

## நாடு முழுவதும்

# 400 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள்

## சுட்டிக்காட்டிய அமைச்சர் பிமல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சுமார் 400 பாதுகாப்பற்ற புகையிரதக்கடவைகள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவை அனைத்தும் இந்த வருடத்திற்குள் பாதுகாப்பானதாக மாற்றப்படும் எனவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2025 வரவு-செலவுத் திட்ட உரையின் குழுநிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-8)

## தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கைகள்

# விரைவாக மறுசீரமைக்க நடவடிக்கை

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர்



(கொழும்பு)

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைகளை விரைவாக மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது

தற்போதுள்ள ஆசிரியர் இடமாற்ற கொள்கைகளுக்கு அமைய மாகாண பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுக் கொள்ள 21 கடிதங்களைப் பரிமாற்றம் செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாக பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

தற்போதுள்ள வழிமுறைக்கமைய, சில மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக தேசிய பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது சிக்கலாக மாறிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி ஆசிரியர் இடமாற்ற கொள்கைகளை உடனடியாக மறுசீரமைப்பதற்கான சில கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளன.

10 வருடங்களாக ஒரே பாடசாலையில் சேவை புரியும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கான செயல்முறையும் இதனூடாக மாற்றம் செய்யப்படும் எனவும் கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் ஆசிரியர்களுக்கு தங்களுடைய வீடுகளிலிருந்து அருகில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்லக் கூடிய வகையில் புதிய ஆசிரியர் இடமாற்ற முறைமை உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ். துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் துடுப்பாட்ட இறுதிப்போட்டி இன்று


கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி


யாழ்.பல்கலைக்கழக அணி

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கை கிரிக்கெட் பிரிவு மூன்றிற்கான (Division-III) துடுப்பாட்ட இறுதிப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட இத் துடுப்பாட்டப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மற்றும் யாழ். பல்கலைக்கழக அணியும் எதிர்கொள்கின்றன.

இப் போட்டியில் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்க முன்னாள் பொருளாளர் ஜெ.வீரசிங்கம், விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திருமதி.க. சுலபாமதி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.(6-8)

## துடுப்பாட்ட சமர்களின் இறுதியாட்டம் இன்று




வடக்கின் போரின் யாழ்.மத்திய கல்லூரி 85 ரன்களும் பொன் அணிகளின் போரில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 50 ரன்களையும் பெற்று முன்னிலை வகிக்கிறது.

வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டத்தில் இரண்டாம் நாள் போட்டியில் முதலில் இன்னிங்ஸினை விளையாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 66 ஆவது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ரன்களை பெற்றுக் கொண்டது. அவ்வணி சார்பாக ஆர்.அனுசாந் 86 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். யாழ்.மத்திய கல்லூரியின் பந்து வீச்சில் ஆர்.நியூட்டன் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் 50 ரன்கள் பின்தங்கிய நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 135/8 விக்கெட்டுக் களை இழந்து 85 ரன்கள் பெற்று முன்னிலை வகிக்கிறது.

பொன் அணிகளின் போரில் இரண்டாம் நாள் போட்டியில் முதல் இன்னிங்ஸினை விளையாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 63 ஆவது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

16 ரன்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸினை துடுப்பெடுத்தாடி வரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆட்ட நேர முடிவில் 64/5 விக்கெட்டுக்களை இழந்து 50 ரன்களைப் பெற்று முன்னிலை வகிக்கிறது.

குறித்த இரு துடுப்பாட்ட சமர்களின் இறுதியாட்டம் இன்றுடன் முடிவு பெற உள்ளது. (6-33)

## சம்பியன்ஸ் ட்ராபி யாருக்கு?

## இந்தியா-நியூசிலாந்து நாளை பலப்பரீட்சை




2025 ஆம் ஆண்டுக்கான சம்பியன்ஸ் டிராபியின் இறுதிப் போட்டி நாளை டுபாய் மைதானத்தில் இலங்கை நேரப்படி பி.ப 2.30 மணிக்கு இடம்றெவுள்ள நிலையில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

ஐசிசி போட்டிகளில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் 20 முறை மோதியுள்ளன. அதில் இந்திய அணி 6 முறை மட்டுமே நியூசிலாந்தைத் தோற்கடித்துள்ளது.

மாறாக நியூசிலாந்து 12 முறை வெற்றியைப் பதிவுசெய்து அச்சுறுத்தும் அணியாக இருந்துள்ளது.

2000 ஆம் ஆண்டு சம்பியன்ஸ் டிராபியில் காலிறுதி மற்றும் அரையிறுதியில் பலம் வாய்ந்த அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவை வீழ்த்திய இந்திய அணி, இறுதிப்போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக தோல்வியை சந்தித்தது.

இந்திய கப்டன் சவுரவ் கங்குலி அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டியில் சதம் விளாசிய போதும், கோப்பையை வெல்லமுடியவில்லை.

2019 உலகக்கோப்பையை வெல்லும் அணியாக பார்க்கப்பட்ட இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிரான அரையிறுதிப்போட்டியில் 240 ரன்களை அடிக்க முடியாமல் 18 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வியைச் சந்தித்தது.

அதேபோல 2021 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிவரை முன்னேறிய விராட் கோலி தலைமையிலான இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிராக 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இந்நிலையில் ஐசிசி போட்டிகளில் இந்தியாவிற்கு மறக்க முடியாத தோல்விகளைக் கொடுத்திருக்கும் நியூசிலாந்து அணி, சமீபத்தில் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை 3-0 என வென்று ஒயிட் வாஷ் செய்து வரலாற்று வெற்றியை பதிவுசெய்தது.

இந்தச் சூழலில் 2025 சம்பியன்ஸ் டிராபி இறுதிப்போட்டியில் இந்திய அணி நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளும் நிலையில் இது வரையிலான தோல்விகளுக்கு எல்லாம் இந்தியா பழிதீர்க்குமா? அல்லது இந்தியாவிற்கு எதிரான நியூசிலாந்தின் ஆதிக்கம் தொடருமா? என கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களிடம் அடாவடி இடைநிறுத்தப்பட்ட இ.போ.ச நடத்துநர்

(ஹற்றன்)

நுவரெலியா பகுதியில் பாடசாலை மாணவர்களை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தில் ஏற்ற மறுத்த நடத்துநர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளாரென போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.


இ.போ.ச பேருந்து நடத்துனர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு முடியும் வரை அவர் சேவையில் உள்ளீர்க்கப்படமாட்டார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்கள் தொடர்பில் விசேட கொள்கையொன்றினை அரசாங்கம் வகுத்திருக்கும் சூழ்நிலையில் இப்படியானவற்றை அனுமதிக்க முடியாதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நாவலபிட்டியில் இருந்து கினிகத்தேனை ஊடாக ஹற்றனுக்கு பயணிகளை ஏற்றிச்செல்லும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் இருந்து பாடசாலை மாணவர்களை வெளியேறுமாறு நடத்துநர் தெரிவிக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் பேசுபொருளானது இதையடுத்து நடத்துநர் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். (நி-8)

# இலங்கையின் பொருளாதாரத்துறை மறுசீரமைப்புக்கு இந்தியா ஆதரவு

## லண்டன் மாநாட்டில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு



(லண்டன்)

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவை அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.


லண்டனில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது இது தொடர்பாக தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் எமது அண்டைய நாட்டுக்காக எமக்கு ஒரு பொறுப்பு உள்ளதைப் போன்று எமது அண்டைய நாட்டுக்கும் அவ்வாறான பொறுப்பு உள்ளது என தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் இதன்போது சுட்டிக்காட்டிய அவர், பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியத்தை விடவும் அதிக உதவி தங்களது தரப்பினரால் வழங்கப்பட்டதாகச் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-8)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

காணி விற்பனைக்கு
கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
• கல்வியங்காட்டு சந்தியிலிருந்து 350 மீற்றர்
• நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து 1.7Km
077 185 4870

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிள்ளையாய் மடியில் 08-08-1942
மங்கள விநாயகர் அடியில் 28-02-2023

அமரர். திரு.வேலுப்பிள்ளை செல்வரத்தினம்
(இரத்தினம்)

(உப்பு வல்லை ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம், சிறிதேவி சைவ உணவகம், சிறிதேவி பழக்கடை உரிமையாளரும்)
திதி - பூர்வபக்க நவமி 08.03.2025

மறைந்தும் மறையாது என்றென்றும்
எம் மனங்களில் நிறைந்தவர் அப்பா!
கண்முன்னே வாழ்ந்த காலம் கண்ணிமைக்கும் நேரத்தில்
கனவாகிப் போனதே அப்பா!
ஈராண்டுகள் கழிந்தாலும் உங்கள் நினைவே நிழலாய்
அமைந்து விட்டதே அப்பா!
இறை தொண்டில் உங்களை அர்ப்பணித்தீர்கள் இதுவே
போதும் என்று உப்பு வல்லை ஸ்ரீ மங்கள விநாயகர்
ஆட்கொண்டரோ உங்களை!

சிறிதேவி பழக்கடை,
மந்திகை புலோலி தெற்கு புலோலி.
குடும்பத்தினர்
(C-2403)

# இராசிபலன்

08.03.2025
மாசி 24, சனிக்கிழமை
நவமி பிற்பகல் 12.34 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 3.04 மணிவரை
சுபநேரம் 3.24 - 4.54 மணிவரை
இராகுகாலம் 9.24 - 10.54 மணிவரை

மகளிர் தினம்
சந்திராஷ்டமம்- அனுசம்

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**கடகம்** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரும்.

**ரிஷபம்** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்ல காரியத்தில் அடித்தளம் அமைப்பீர்கள்.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம். வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முயல்வீர்கள், காலைப்பொழுதில் கலப்பான செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**கோபம் என்னும் தீ தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் அழித்து விடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுபவர்கள்

## தண்டிக்கப்பட வேண்டும்– ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

**பெண்களுக்கு எதிரான வன்முறைகளிலோ, துர் நடத்தைகளிலோ ஈடுபடுபவர்கள் தராதரம் பாராமல் தண்டிக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.**




வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு நடத்திய சர்வதேச மகளிர் தின விழா - 2025, சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் அமைச்சின் செயலர் பொ. வாகீசன் தலைமையில் நேற்று இடம் பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

பெண்களின் உரிமைகள் இன்றும் மறுக்கப்படுவதனால் தான் மகளிர் தினத்தை நாம் கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம். இன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்ட கொள்கை ஆவணம் முக்கியமானது.

பெண்களுக்கு எதிரான துர் நடத்தைகளில் ஈடுபடுபவர்களும், வன்முறைகளில் ஈடுபடுபவர்களும் சட்டத்தின் பிடியிலிருந்தும், மேலதிகாரிகளின் உதவிகளுடன் தப்பிக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

பெண்களுக்கு எதிரான இத்தகைய செயற்பாடுகளை இல்லாதொழிக்க அனைவரும் ஓரணியில் கைகோர்த்துக் குரல் எழுப்ப வேண்டும் என ஆளுநர் அழைப்புவிடுத்தார்.

இதன் போது பெண் சாதனையாளர்களுக்கான விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எஸ்.ஓ) சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகரும் கலந்து கொண்டார். (6-8)

# 'கலாதரம்' இதழ்- 6 ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பிரிவினரால் 2025 ஆம் ஆண்டுக்கான பிரதேச மலர் 'கலாதரம்' மலர் 06 வெளியீடு செய்யப்படவுள்ளமையால், பிரதேசசெயலகப் பிரிவிற்கு உட்பட்ட எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலை, கலாசாரம், சமயம், மருத்துவம், பாரம்பரிய விடயங்கள், பிரதேச ஆளுமைகளின் விடயங்கள், இடப் பெயராய்வுகள், வாய்மொழி வழக்காறுகள், கட்டுரைகள், சிறுகதை, கவிதை, குறுநாடகம், சிறுவர் பாடல்கள், துணுக்குகள், பாரம்பரிய சமையல் விடயங்கள், வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த புகைப்படங்கள் - விபரங்கள், முதலான விடயப் பரப்புகள் தொடர்பான ஆக்கங்கள் வரையலாம்.

எதிர்வரும் 20.03.2025 ஆம் திகதிக்கு முன்னராக சுய விபரங்களுடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. மதியழகன் சுபாஜினி அறிவித்துள்ளார். (6-8)



மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பெண்களுக்கான கடினப்பந்துத் துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் காரை சலஞ்சர்ஸ் மைதானத்தில் இடம்பெற்றது.

# கலாசாலையில் நடைப்பயிற்சி கழகம் ஆரம்பித்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர்களிடையே உடல் ஆரோக்கியத்தைப் பேணும் நோக்குடன் நடைப் பயிற்சி கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு கலாசாலை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் கலாசாலையின் உயிரியல் பாட முன்னாள் விரிவுரையாளர் வ.சி. குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டு கழகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

கலாசாலை வேலை நேரத்தின் பின்னர் ஆர்வமுள்ளோர் மாலை 5 மணி தொடக்கம் ஆறு மணி வரை நடைப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சியை மேற்கொள்ளும் நோக்குடன் இச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடற்பயிற்சியின் அவசியம் பற்றி எடுத்துரைத்த மருத்துவர் த.சத்தியமூர்த்தி வாரம் ஒரு முறை தானும் கலாசாலைக்கு வருகை தந்து நடைப்பயிற்சியில் கலந்து கொள்வதாகவும் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் சிலரும் பங்கேற்று வழிகாட்டல்களை வழங்குவர் என்றும் தெரிவித்தார்.

இதன் போது கலாசாலையின் விரிவுரையாளர்கள் மற்றும் விடுதி மாணவர்கள் சிலரும் நடைப்பயிற்சியில் கலந்து கொண்டனர். (6-8-33)

# பெண்கள் நல சிகிச்சைப் பிரிவு திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பிரதேச வைத்தியசாலையில் பெண்கள் நல சிகிச்சைப்பிரிவுத் திறப்பு விழா - 2025 நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணிக்கு வட்டுக் கோட்டை பிரதேச வைத்திய சாலையில் இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி மருத்துவர் திருமதி. கஜானா கெங்காதரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணசபைச் சுகாதார அமைச்சின் யாழ். செயலாளர் திருமதி. பரமோதயன் ஜெயராணி கலந்து கொள்ளவுள்ளார். (6-8)


## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/ புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு- 2025 இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் ந. மயூரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சபா. ஸ்ரீகரன் (முன்னாள் அதிபர்) கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

# கைத்தொழில் நிறுவனங்களை பார்வையிட்ட அமைச்சர் சுனில்



(யாழ்ப்பாணம்)

யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹிந்துநெத்தி நேற்று காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, பரந்தன் மற்றும் ஆனையிறவு உப்பள நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் இரா.சந்திரசேகர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன் மற்றும் எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, யாழ். மாவட்ட செயலாளர் ம.பிரதீபன், அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுனில் ஹிந்துநெத்தி அனைத்து கைத்தொழில் நிலையங்களையும் மேம்படுத்தி அவற்றின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் குறித்த களப்பணி இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள், உள்நாட்டு முதலீட்டாளர்கள், இன, மத, மொழி பேதங்களைக் கடந்து அனைவரையும் உள்வாங்கி பாரிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்குத் தாம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். (6-8-33-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து, ரயில் சாரதிகளாக பெண்கள்

## அநுர அரசாங்கத்தின் புதிய திட்டம்

**(கொழும்பு)**

**இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் ரயில் சேவைக்கும் பெண்களை பணியமர்த்துவதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**



நேற்று பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இந்தக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இலங்கை போக்குவரத்து சபைக்கும், ரயில் சேவைக்கும் பெண்களை பணியமர்த்துவதற்கு எமது அமைச்சரவை அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

பேருந்து ரயில் சாரதிகளாக, பாதுகாவலர்களாக பெண்களை இன்னும் சில நாட்களில் பார்க்க முடியும்.

சர்வதேச மகளிர் தினத்திற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதேபோல், பாடசாலை பேருந்துகளை பெண்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கனவும் உள்ளது என தெரிவித்தார். (நி-8)

# மத்தள விமான நிலையத்தால் 38.5 பில்லியன் நஷ்டம்

## சுட்டிக்காட்டிய அமைச்சர்

(கொழும்பு)

மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை விமான பழுதுபார்க்கும் நிலையமாக மாற்ற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2025 வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், மத்தள விமான நிலையத்தை பொருத்தமான வெளிநாட்டு பங்காளியுடன் இலாபம் ஈட்டும் முயற்சியாக மாற்ற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

மத்தள விமான நிலையம் சுமார் 36.5 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களில் 38.5 பில்லியன் ரூபா நட்டத்தை சந்தித்துள்ளது.

இந்த நிறுவனத்தை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார். (நி-8)

# கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பின் கீழ் ஜப்பான் அரசாங்கம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் திருத்தப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் பரிமாற்றப் பத்திரங்களில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று நிதியமைச்சில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாட்டா மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன,

"இலங்கை மேற்கொள்ளும் பொருளாதார சீர்திருத்தங்களை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். இந்த சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதன் மூலமே இந்நாட்டின் பொருளாதாரத்தை நிலையாகவும் வலுவாகவும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்" என்று தெரிவித்தார். (நி-8)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு :1995 - இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>12இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Tech,Sofrware Developer(Canada)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/15187 | பிறப்பு: 1992 -இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா- 25 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: PHD, Teaching Assistant<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/11178 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'7'<br>தகைமை/தொழில்-BA,Lab Assistant<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15188 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: HNDA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14201 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc,Software Engineer<br>எதிர்பார்ப்பு: IT Field<br>தொ.இ: B/15191 | பிறப்பு : 1997 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Engineer(Final Year)<br>எதிர்பார்ப்பு: உயர்வான கல்வித்தகைமை<br>தொ.இ: G/14204 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## பெயர்மாற்ற அறிவித்தல்

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையைச் சேர்ந்த மரியசெல்வம் கொலின் ஆகிய நான் 08.03.2025 இன்று முதல் எனது பெயரை சாள்ஸ் கொலின் எனப் பெயர்மாற்றம் செய்கின்றேன். எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**உண்மையுள்ள**
**மரியசெல்வம் சாள்ஸ் கொலின்**

(3599)

## மணிவிழா வாழ்த்துக்கள்



**திருமதி.**
**ராகினி பகீதரன்**
(SLTS-I)
**(மனைப்பொருளியல் ஆசிரியர்)**

Best Wishes!

**சேவை விபரம்**

- யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வித்தி 21.10.1988-19.01.1992
- யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 20.01.1992-02.01.1994
- யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வித்தி 03.01.1994-04.01.2007
- யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை 05.01.2007-31.12.2015
- யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் 01.01.2016-07.03.2025

எமது பாடசாலையில் மனைப்பொருளியல் ஆசிரியராக சேவையாற்றி 08.03.2025 இன்று சனிக்கிழமை ஓய்வுபெறும் **திருமதி.ராகினி பகீதரன்** அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

(சி-2404)

# சிவப்பு நிறத்தில் நிலா

(கொழும்பு)

சந்திர கிரகணத்தில் நிலவு சிவப்பு நிறத்தில் காணப்படும் அரிய நிகழ்வு எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கு 'Red Moon' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நிகழவிருக்கும் சந்திர கிரகணத்தில் இந்த சிவப்பு நிற நிலா தென்படும்.

ரேலீ சிதறல் காரணமாக சந்திரனில் சிவப்பு நிறம் ஏற்படுகிறது. 2022 இற்கு பிறகு இந்த ஆண்டு 2 நாட்கள் இந்த நிகழ்வு ஏற்படுகிறது.

இந்த கிரகணம் சுமார் 5 மணிநேரம் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மும்பை தாக்குதல் விவகாரம் அதிரடி காட்டிய அமெரிக்கா



(வோஷிங்டன்)

மும்பை பயங்கரவாதத் தாக்குதல் குற்றவாளியான தஹவூர் ராணா, இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதற்குத் தடை விதிக்கக் கோரி அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து இருந்தார். இந்த மனுவை விசாரித்த அமெரிக்க உச்சநீதிமன்றம் ராணாவின் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

முன்னதாக நாடு கடத்தப்பட்டால் இந்தியாவில் விசாரணையை எதிர்கொள்ளும் அளவுக்கு நீண்ட நாட்கள் உயிர்வாழ முடியாது என்று ராணா தனது மனுவில் குறிப்பிட்டு இருந்தார். மேலும் இந்தியாவில் சித்திரவதை செய்யப்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் கூறியிருந்தார். நாடு கடத்துவதற்குத் தடை விதிக்காத பட்சத்தில் தனது வழக்கு மீதான அதிகார வரம்பை அமெரிக்க நீதிமன்றங்கள் இழக்க நேரிடலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.


பாகிஸ்தானை சேர்ந்த அமெரிக்க பயங்கரவாதி டேவிட் கோல்மேன் ஹெட்லியின் நெருங்கிய கூட்டாளியாக அறியப்படும் தஹவூர் ராணா கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பைப் பயங்கரவாத தாக்குதலை திட்டமிட்டவர்களில் முக்கிய புள்ளியாக அறியப்படுகிறார்.

தான் பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்டவன் என்றும், முஸ்லீம் என்பதாலும் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டால் சித்திரவதைக்கு ஆளாக நேரிடும் என்றும் ராணா தனது மனுவில் குறிப்பிட்டு இருந்தார்.

இதுதவிர தனக்கு வயிற்றுப் பகுதியில் கோளாறு, பார்க்கின்சன் நோய் மற்றும் சிறுநீர்ப்பை புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். (ஙி-8)

# வர்த்தகப் போ...

## வரி விதிப்பை ஒத்தி...



(வோஷிங்டன்)

கனடாவில் இருந்... செய்யப்படும் பல்வேறு... 25 சதவீதம் வ... நடைமுறையை அமெ... டொனால்ட் ட்ரம்ப் ... ஒத்திவைத்துள்ள...

வர்த்தகப் போர் ஏற்படும் அபாயம் இருப்பதைத் தொடர்ந்து கனடா மற்றும் மெக்சிக்கோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக வரி விதிப்பதை ஒத்திவைப்பதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைத் தொடர்ந்து கனடாவும் அமெரிக்க பொருட்களுக்கு வரி விதிக்கும் நடைமுறையை ஒத்திவைப்பதாக அறிவித்துள்ளது.

அதன்படி ஏப்ரல் 2 ஆம் திகதி வரை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு அதிக வரி

விதி... டின்... டொ... வித்... திற்... இரு...

## குச்சி ஐஸுக்குள் உறைந்திருந்த பாம்பு

### சுவைக்க முற்பட்டவர் அதிர்ச்சியில்



(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் ஒருவர் தள்ளுவண்டி கடைக்காரரிடம் குச்சி ஐஸ் ஒன்றை வாங்கி கவரை பிரித்துள்ளார். அப்போது அதில் வித்தியாசமாக ஏதோ ஒட்டியிருப்பதைக் கவனித்து உற்றுப் பார்த்தவர் அதிர்ந்து போனார். ஒரு சிறிய பாம்பு ஐஸ் கட்டியில் உறைந்து போய் இருந்தது.

இதைப் பார்த்தவர் பதறிப் போனார். நல்ல வேளை வாயில் வைத்து சுவைக்கவில்லை என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார். பின்னர் அதைப் படம் பிடித்து வலைத் தளத்தில் வெளியிட்டார்.

பல ஆயிரம் பேர் கருத்துப் பகுதியில் தங்கள் அதிர்ச்சியை வெளிப்படுத்தினர். ஐஸ்கிரீம் பிரியர்கள் ஐஸுக்குள் பாம்பும் இருக்குமா? என்று உறைந்து போயிருக்கிறார்கள். (ஙி-8)



## அமெரிக்கா-உக்ரைன் மீண்டும் பேச்சுவார்த்தை

(கீவ்)

அமெரிக்காவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தை அர்த்தமுள்ள சந்திப்பாக இருக்கும் என உக்ரைன் ஜனாதிபதி வொலாடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன்-ரஷ்யா போர் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் அடுத்த வாரம் சவுதி அரேபியாவில் நடைபெற உள்ள பேச்சு வார்த்தை அர்த்தமுள்ளதாக இருக்கும் எனத் தான் நம்புவதாக வொலாடிமிர் ஜெலென்ஸ்கி ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதிக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இடையில் கடந்த சில நாட்களுக்கு முன் நடைபெற்ற சந்திப்பு வாக்கு வாதத்தில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஙி-8)

உ... கை... தி... மூ... போ... பிரா... மன... செ... நன்... செ... வெ... அவ... என்... நீங்... னை... பூர்... தெரி... கனு... என... சதுக்...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# பார் அபாயம்! ........ திவைத்தார் ட்ரம்ப்



ர)

இருந்து இறக்குமதி
ல்வேறு பொருட்களுக்கு
வரி விதிக்கும்
அமெரிக்க ஜனாதிபதி
ரம்ப் ஒரு மாதத்திற்கு
த்துள்ளார்.

ரிக்க
க்கும்
ஒத்தி
.
திகதி
ருந்து
வேறு
வரி

விதிக்கப்படாது என கனடா நாட்டின் நிதித்துறை அமைச்சர் டொமினிக் லி பிளாங்க் தெரிவித்துள்ளார்.

எனினும் இது ஒருமாத காலத்திற்கு மட்டும் தான் அமுலில் இருக்கும்.

முன்னதாக ஆட்டோமொபைல் துறையில் முன்னணி நிறுவனங்களான ஃபோர்டு, ஜெனரல் மோட்டார்ஸ் மற்றும் நிறுவனங்களின் மூத்த தலைவர்களைச் சந்தித்த ஜனாதிபதி ட்ரம்ப் தற்போது வரி விதிப்பை ஒத்திவைக்கும் முடிவை எடுத்துள்ளார். (நி-8)

## ஜெய்சங்கர் காரை மறித்த காலிஸ்தான் ஆதரவாளர்கள்

### லண்டனில் சம்பவம்

(லண்டன்)

லண்டனில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எதிராக காலிஸ்தான் ஆதரவாளர்கள் கோஷமிட்டனர்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். அந்த வகையில் லண்டனில் உள்ள சாட்தம் ஹவுஸ் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜெய்சங்கர் கலந்துகொண்டார்.

அப்போது அந்த கட்டடத்திற்கு வெளியே காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் காலிஸ்தான் கொடிகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்பினர். போராட்டம் காரணமாக அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு வெளியே வந்த ஜெய்சங்கர் காரில் ஏறினார்.

அப்போது காலிஸ்தான் ஆதரவாளர்கள் கோஷங்கள் எழுப்பியதுடன் அவரின் காரை மறித்து போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அதில் ஒருவர் ஆவேசமாக கோஷமிட்டபடி இந்திய தேசியக் கொடியை கிழித்தார்.

உடனே அந்த நபரை பொலிஸார் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். பின்னர் ஜெய்சங்கர் காரில் புறப்பட்டுச் சென்றார். இந்த சம்பவத்தால் பரபரப்பு நிலவியது. இந்த காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

இங்கிலாந்தில் தேசியக் கொடி கிழிக்கப்பட்ட சம்பவத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், "பிரிவினைவாத, பயங்கரவாத இயக்கத்தின் செயலைக் கண்டிக்கிறோம். ஜனநாயக அரசு அளித்த சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் இச்செயல், கவலை தருகிறது. சம்பந்தப்பட்ட அரசு, கடமையை உணர்ந்து செயற்படும் என நம்புகிறோம்" எனத் தெரிவித்துள்ளார் (நி-8)



## உங்கள் பிரார்த்தனைகளுக்கு நன்றி

### வைத்தியசாலையிலிருந்து வந்த போப்பின் குரல்

(வத்திக்கான்)

நிமோனியாவால் வைத்தியசாலையில் சுமார் மூன்று வாரங்களாக போராடி வரும் போப் பிரான்சிஸ், தான் குணமடைய பிரார்த்தனை செய்து வருபவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் ஓடியோ செய்தியை பதிவு செய்து வெளியிட்டுள்ளார்.

அந்தக் குரல் பதிவில் அவர், சதுக்கத்திலிருந்து என் உடல்நலத்திற்காக நீங்கள் செய்யும் பிரார்த்தனைகளுக்கு என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இங்கிருந்து உங்களுடன் இணைகிறேன் - என்று செண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் ஒளிபரப்பப்பட்ட செய்தியில் போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

88 வயதான பிரான்சிஸ், பெப்ரவரி 14 அன்று ரோமின் ஜெமெல்லி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உலகம் அவரது குரலைக் கேட்பது இதுவே முதல் முறை.

போப்பின் உடல் நலனுக்காக பிரார்த்தனை செய்ய ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் புனித பீட்டர் சதுக்கத்தில் அவரது நலன் விரும்பிகள் கூடி வருகின்றனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அங்கு நூற்றுக்கணக்கான மக்கள் அவரது செய்தியைக் கேட்டதும் கைதட்டினர். (நி-8)



த்துள்

பதிக்
ாதிப
சில
நடை
வாத
றிப்பி
-8)

## பாகிஸ்தான்-ஆப்கானுக்கு பயணத்தடை விதிக்கும் அமெரிக்கா?



(வோஷிங்டன்)

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்படலாம் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அபாயங்கள் காரணமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இரு நாடுகளுக்கும் பயணத் தடை விதிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை அடுத்த வாரம் அமுலுக்கு வரக்கூடும் என ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த 2 நாடுகளைத் தவிர பட்டியலில் வேறு நாடுகளும் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாய் பூத்தவள்



மான் என்றும் மயில் என்றும்
தேன் என்றும் எழுதினர்
கொடி என்றும் கனி என்றும்
பூ என்றும் புழுகினர்.

சாதனை படைத்த பெண்கள்
சரித்திரம் அறியாதோர்!

கல்வியில்; கலைகளில்; கவிதையில்;
கதைகளில்;
காவியம்; ஓவியம்; விளையாட்டு;
விண்வெளி; பாராளும் பதவியில்...;
போர்க்களத்தில் சமர் புரிந்த
வேங்கை மாதரை அறியாதோர்

சாஸ்திரங்கள்...; சடங்குகள்...;
சம்பிரதாயங்கள் - எலாம்
பெண்ணடிமை பேணினர்

பெண்ணடிமை விலங் குடைக்க
பாரதி பாடிய புதுமைப் பெண்,
புதுவழி காட்டிட
புதிதாய்ப் பூத்தாள் பங்குனி எட்டில்.

சாந்தையூரிவன்


## சாதித்துக் கொண்டேயிருப்பவள்

அம்மா என்று அழையாத சேய் இல்லையே
அன்பானவளை நேசிக்காத கணவனும் இல்லை
அக்காவின் பாசத்திற்கு பணியாத தம்பியும் இல்லை
தங்கையின் குறும்பை ரசிக்காத அண்ணனும் இல்லை
மகளின் மலர்ப்பாதம் சுமக்காத தந்தையும் இல்லை
தோழிக்கு தோள் கொடுக்காத நண்பனும் இல்லை

துன்பத்தை துடைத்தெறிய வந்தவள் பெண்
இன்பத்தை நிலைத்திட வைப்பவள் பெண்
தோல்வியைத் தோற்கடிக்க துணிந்தவன் பெண்
வெற்றியை ஜொலிக்கச் செய்பவள் பெண்
பயத்தினைப் பக்கத்திலே அணுகாதவள் பெண்
வீரத்தில் வீறுநடை போடுபவள் பெண்
சாதிக்கப் பிறந்தவள் பெண் அல்ல
சாதித்துக் கொண்டேயிருப்பவள் பெண்.

- பிரம்மஸ்ரீ சபா.உமாபதிசர்மா -



தென்மராட்சி-மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும்- ஆங்கில மொழி தின நிகழ்வும் நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சுதாமதி தயாபரன் தலைமையில் இடம்பெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3309

### மனோகரி

சாதனைகளோடு சரித்திரம்
படைக்க கடவுளால்
படைக்கப்பட்ட கற்பக விருட்சம்
தான் பெண்கள்

**மகளிர் தின**
**வாழ்த்துக்கள்**

### தேனு

அடேய் உன்னைய பார்த்தா மார்ச் மாச
வெயில் மாதிரியே தெரியலேடா...




### ஜஸ்மிகா

உண்மை தத்துவம்... ஓடி விளையாடிய
வயதில் கிடைத்த சுதந்திரம்....



உழைப்பதற்காக ஓடும் வயதில்
கிடைப்பதில்லை...!

### தீபன்




உனக்கு என்று சொந்தமா ஏதாவது
சேர்த்து வைத்திருக்கிறியா...



கடன்தான் ஒரு 5 இலட்சம் சேர்த்து
வைத்திருக்கிறேன்.. வேறு ஒன்றும் இல்ல...

### கரன்

இன்கிரிமென்ட் கொடுன்னு கேட்டா,
என்னடா வேலைசெஞ்சன்னு கேட்கிறாங்க..



சரின்னு லீவு கேட்டா, நீ இல்லாம கம்பனி
எப்படி நடக்கும் என்று சொல்லுறாங்க...

### விஸ்ணு

பெற்றோர் சொல்லுக்கு அடங்காத
குழந்தைகள்....



பெற்றோர்களின் 'செல்' லுக்கு அடங்கி
விடுகின்றனர்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணை ஆலய பொங்கல் முன்னாயத்த கலந்துரையாடல்



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழாவுக்கான முன்னாயத்த கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் ஆலய முன்றலில் நடை பெற்றது.

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் 11 ஆம் திகதி அன்று நடைபெறவுள்ளது இப் பொங்கல் விழா சிறப்பாக இடம் பெறுவதற்கு ஏற்ற வகையில் ஆலய சுற்றுச் சூழலை சிரமதானம் செய்தல், ஆலய வீதி திருத்தங்கள், போக்குவரத்து வசதிகள், குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பில் இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கண்டாவளை பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர், உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர், இலங்கை போக்குவரத்து சபையினர், கரைச்சி பிரதேச சபையினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், கிராம சேவையாளர்கள், சுகாதார சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், தனியார் போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள், ஆலய பரிபாலன சபையினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அடியார்கள் என பலரும் கலந்து கொண்டனர். (6-8-315-316)

# கௌரவிப்பு நிகழ்வுகள்

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டை விவேகானந்தா சனசமூக நிலையம் நடத்தும் நொச்சி மோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் 2023 ஆம் ஆண்டு (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு விவேகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் குறித்த நிலையத்தலைவர் அ.சத்தியகாந்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் திருமதி.தெர்ஜனா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

(கரணவாய்)

கம்பர் மலை கலைவாணி சனசமூக நிலையம் நடத்தும் மாணவர் கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு கலாவாணி முன்றலில் நிலையத்தலைவர் வே.கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் இரா. சந்திரசேகரன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8-60)

# வவுனியாவில் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த

## போதை மாத்திரைகள், ஹெரோயின் மீட்பு



(குருமன்காடு)

வவுனியாவில் போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோயின் போதை பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனி அறிவுறுத்தலின் கீழ் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக தலைமையிலான பொலிஸ் குழுவினர் தேக்கவத்தை பகுதியில் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 1000 போதை மாத்திரைகள் மற்றும் 2200 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

முதற்கட்ட விசாரணைகளில் குறித்த போதை மாத்திரைகள் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-8-250)

# யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)


மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோயிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறி முகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக் கோயிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித்தொல்லை நீங்க, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற் பயிற்சிகள்,எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காய கல்பப் பயற்சிகளை தமிழ் நாட் டிலிருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் சு. மீரா வழுங்கவுள்ளார். இப்பயிற்சி களை பயில விரும்புவோர் 021 222 2772 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியு மென ஏற்பட்டாளர்கள் அறிவித் துள்ளனர் . (6-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 500 | 600 |
| தக்காளி | 120 | 100 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 200 | 200 |
| கோவா | 300 | 300 | 400 | 400 |
| கரட் | 750 | 700-900 | 1000 | 1000 |
| பூசணி | 120 | 120 | 150 | 120 |
| புடோல் | 150 | 120 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 150 |
| பாகற்காய் | 300 | 350 | 500 | 300 |
| வெண்டைக்காய் | 250 | 350 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 300 | 400 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 400 |
| பீற்றூட் | 150 | 250 | 150 | 200 |
| கறிமிளகாய் | 800 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 1500 | 2000 |
| போஞ்சி | 150 | 200 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 150 | 120 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 200 | 220-260 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 | 450 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 150 | 150 |
| முள்ளங்கி | 100 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 85 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 100 | 50 | 160 |

# வவுனியாவில் இடம்பெற்ற தொழிற்சந்தை நிகழ்வு



(குருமன்காடு)

மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன், வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்திய மாபெரும் தொழிற்சந்தை கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, உதவி மாவட்ட செயலாளர் திருமதி. சபர்ஜா, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா.கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் காஞ்சனா குமார ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

இத் தொழிற்சந்தையில் 30 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் வருகை தந்திருந்ததுடன் 100இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பினைப் பெறும் நோக்குடன் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 719





அப்படியிருந்தும் என் மீது குற்றம் சாட்டிச் சிறைப்படுத்திக் கொண்டு வரத் தந்தை கட்டளையிட்டிருக்கிறார்.

"தம்பி! நீ இராஜ்யத்தை ஒப்புக்கொண்டிருந்தால் உன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கட்டளை பிறந்திருக்காது! நீ சுதந்திர மன்னன் ஆகியிருப்பாய்! அப்போது உன்னை யார் சிறைப்படுத்த முடியும்?"

"தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக அவ்விதம் நான் நடந்து கொண்டிருக்க வேண்டுமா?"

"பொன்னியின் செல்வா! நீ இலங்கை இராஜ்யத்தை ஒப்புக்கொண்டிருந்தால் தந்தை மகிழ்ச்சி அடைந்திருப்பார்! மிச்சமுள்ள சோழ சாம்ராஜ்யத்தை உன் தமையனுக்கும் மதுராந்தகனுக்கும் பிரித்துக் கொடுத்து மன நிம்மதி அடைந்திருப்பார். இப்போதும் அதற்குத்தான் முயற்சி நடக்கிறது. தம்பி! கொள்ளிடத்துக்கு வடக்கே ஒரு ராஜ்யமாகவும், தெற்கே ஒரு இராஜ்யமாகவும் பிரித்து விடப் பிரயத்தனம் நடக்கிறது.

நீ வந்தால் இது விடயத்தில் தந்தைக்கு உதவியாயிருப்பாய் என்று அவருக்கு நம்பிக்கை. முன்னால் உனக்குச் சொல்லி அனுப்பி நீ வராதபடியால் இப்போது சிறைப்படுத்திக் கொண்டு வரச் சொன்னார். இலங்கை இராஜ்யத்தை நீ மறுத்துவிட்டாய் என்பது சக்கரவர்த்திக்கு நன்றாய்த் தெரியும்."

"இராஜ்யத்தைப் பிரிப்பதற்கு நான் ஒருநாளும் உதவியாயிருக்கமாட்டேன். அதைப் போல் பெரிய குற்றம் வேறொன்றுமில்லை. அதைவிடச் சித்தப்பா மதுராந்தகருக்கே முழு இராஜ்யத்தையும் கொடுத்து விடலாம்."

"அப்படியானால் முதன் மந்திரியும் நீயும் ஒரே மாதிரி அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்!"

"ஆம் முதன் மந்திரியும் அப்படித்தான் கருதுகிறார். இலங்கைக்கு அவர் வந்ததே இதைப்பற்றி என்னுடன் கலந்து பேசுவதற்காகத்தான். அக்கா! இலங்கை இராஜ்யத்தை நான் வேண்டாம் என்று மறுத்ததின் உண்மைக் காரணத்தைச் சொல்லட்டுமா?"

"என்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வாய் தம்பி!" "ஆம் என் அந்தரங்கத்தைச் சொல்வதற்கு வேறு யாரும் இல்லைதான். இலங்கைக்குப் போவதற்கு முன்னால் அந்நாட்டைப் பற்றிப் பிரமாதமாக எண்ணியிருந்தேன்.

போன பிறகுதான் அது எவ்வளவு சிறிய நாடு என்று தெரிந்தது. குதிரையில் அல்லது யானையில் ஏறிப் புறப்பட்டால் ஒரே நாளில் அந்நாட்டின் மேற்குக் கடற்கரையிலிருந்து, கிழக்கு கடற்கரைக்குப் போய் விடலாம்."

"சோழநாடு மட்டும் அதைவிடப் பெரிதா தம்பி? இந்த நாட்டையும் அப்படி ஒரேநாளில் குதிரை ஏறிக் கடந்துவிட முடியாதா?"

"சோழநாடும் சிறியதுதான், ஆகையினால் சோழ நாட்டுக் கிரீடத்தை எனக்கு யாரேனும் அளித்தாலும், வேண்டாம் என்றுதான் சொல்வேன். இந்தத் தெய்வத் தமிழகத்தைச் சோழநாடு, பாண்டிய நாடு, சேரநாடு என்று பிரித்தார்களே! அவர்கள் பெரிய குற்றம் செய்தார்கள். அதனாலேதான் தமிழகத்தில் வீராதி வீரர்கள் பிறந்தும், இந்த நாடு சோபிப்பதில்லை. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நன்றி மறவாமை



(06.03.2025 அன்றைய தொடர்ச்சி)

கௌரி ஆற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீர் கொண்டு வரத் தீர்மானித்தாள். தன் குழந்தை தொட்டிலில் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைக் கண்டாள். தொட்டிலுக்கு அருகில் தரையில் கீரியும் உறங்கிக் கொண்டிருந்தது.

"நான் ஆற்றுக்குச் சென்று வர அதிக நேரமாகாது. அதற்குள் இந்தக்கீரி என் குழந்தைக்கு ஒரு தீங்கையும் ஏற்படுத்தாது." என்று தனக்குள் சொல்லிக் கொண்டவளாக மறுமுறையும் அவர்கள் இருவரையும் பார்த்துவிட்டு ஆற்றுக்கு விரைந்தாள்.

திடீரென்று ஒரு மெல்லிய சத்தம் கேட்டுக் கீரி விழித்துக் கொண்டது. மேலே பார்த்தது சுவரின் ஓட்டை வழியாக ஒரு பெரிய கருமையான பாம்பு ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

"என் தம்பிக்கு இந்தப் பாம்பு தீங்கு விளைவிக்கும். தாயும் தந்தையும் வெளியே சென்றிருக்கிறார்கள். என் தம்பியை நான் பாதுகாக்க வேண்டும்" என்று எண்ணியது கீரி. பாம்பு தொட்டிலை நோக்கி வர ஆரம்பித்தது. தைரியமாக அந்தச் சிறிய கீரி பெரிய பாம்பின் மீது பாய்ந்து தாக்கியது. நீண்ட நேரம் கடுமையாக நடந்த சண்டையின் இறுதியில் அந்தச் சிறு பிராணி பெரிய பாம்பைக் கொன்றது. அதே நேரம் அந்தணனின் மனைவி வரும் சத்தம் கேட்டது. மகிழ்ச்சியுடன் கீரி தன் தாயிடம் ஓடிச் சென்றது.

தன்னால் முடிந்த அளவு சைகைகளின் மூலம் தன் தம்பியைப் பயங்கரமான பாம்பிடமிருந்து காப்பாற்றியதைக் கீரி அவளிடம் சொல்ல முயன்றது. ஆனால் கௌரி கீரியின் வாயிலும் கால்களிலும் முதலில் இரத்தத்தைக் கண்டாள். அது என்ன சொல்ல வருகிறது என்பதைப் புரிந்து கொள்ளவில்லை.

"என்னுடைய குழந்தையை இந்த மோசமான பிராணி கொன்றுவிட்டது" என்று எண்ணிக் கோபமடைந்தாள். ஆத்திரத்துடன் தண்ணீர் நிரம்பிய குடத்தை அதன் மீது போட்டாள் கீரிப்பிள்ளை துடிதுடித்து இறந்தது.

பதைபதைப்போடு வீட்டினுள் நுழைந்தாள். அவளுடைய குழந்தை தொட்டிலில் இன்னமும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைக் கண்டு வியப்புற்றாள். தரையில் துண்டிக்கப்பட்ட தலையுடன் ஒரு பாம்பின் உடல் கிடப்பதையும் கண்டாள்.

"ஐயோ அறிவில்லாமல் என்ன காரியம் செய்துவிட்டேன்! என் அருமைக் குழந்தையின் விலை மதிப்பற்ற உயிரைக் காப்பாற்றிய நன்றியுள்ள அந்தச் சிறிய கீரியை நானே கொன்றுவிட்டேனே!" என்று கதறியழுதாள்.

நீதி : ஆத்திரம் அறிவை மயக்கும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது, ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்சிகளின் பலம் என்பது தேர்தல் வெற்றியே

**பலம்** என்ற தமிழ்ச் சொல் மிகவும் பெறுமதியானது. எனினும் நம்மில் பலரும் **பலம்** என்பது பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

உண்மையில் ஒருவரின் வெற்றி தோல்வி என்பது அவர் தன்னிடம் இருக்கக்கூடிய பலத்தை எங்ஙனம் பயன்படுத்துகிறார் என்பதைப் பொறுத்தே உள்ளது.

இங்கு பலம் என்று நாம் கூறுகின்றபோது, அதன் மறுபக்கம் பலவீனம் என்பதாக வெளிப்படும்.

ஆம், தம்மிடம் உள்ள பலம், பலவீனம் பற்றி யார் தெளிவாக அறிகிறார்களோ அவர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள்.

இதை நாம் கூறும்போது, எந்தப் பலமும் எம்மிடம் இல்லை என்று சிலர் முணுமுணுக்கலாம்.

ஆனால் அதுவே அவர்களின் பலவீனம் என்பது இங்கு உணர்தற்குரியது.

பரவாயில்லை. பலவீனத்தை அறிந்தால் கூட, பலத்தை அறிய முடியும்.

இருந்தும் தம்மிடம் உள்ள பலவீனத்தைக் கூட பலரும் அறியாமல் உள்ளனர்.

உண்மையில் இப்பூமியின் கண் பிறந்த அனைவரிடமும் ஏதோவொரு பலம் இருக்கவே செய்யும்.

அந்தப் பலத்தைக் கண்டறிந்து அதனைப் பயன்படுத்துபவர்களே வாழ்க்கையின் உன்னதத்தை அடைகின்றனர்.

அந்தவகையில் சிங்கத்தின் பலம் அதன் பிடரியில் உள்ளது. யானையின் பலம் துதிக்கையில் உள்ளது.

இதேபோல ஒரு பாடசாலையின் பலம் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றில் உள்ளது.

ஓர் அரசியல் கட்சியின் பலம் தேர்தல் வெற்றியில் தங்கியுள்ளது.

எனினும் இந்த உண்மையை உணராமல் இருக்கின்றவர்களால் எந்தச் சாதனையையும் படைத்துவிட முடியாது.

உதாரணத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியை எடுத்துக் கொண்டால், தமிழர்களின் அரசியலில் அந்தக் கட்சி மிகப்பெரும் பலம் பெற்றிருந்தது. இங்கு பலம் என்பது அந்தக் கட்சி தேர்தலில் பெற்ற வெற்றியை அடிப்படையாகக் கொண்டது.

ஆம், ஒரு காலத்தில் தமிழ்த் தேசத்தின் முக்கிய பேராளர்கள் தமிழரசுக் கட்சியில் இருந்து அந்தக் கட்சியை மிகச் செம்மையாக வழிப்படுத்தினர்.

ஆனால் இப்போது அந்த நிலைமை அறவே இல்லை.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் அடைவுமட்டம் எவ்வாறாக இருந்தது என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

எனினும் தமது கட்சியின் தோல்வியைக் கூட உணராதவர்கள் அந்தக் கட்சியின் முக்கிய ஸ்தானங்களில் உள்ளனர் எனும்போது, எதிர்காலத்தில் கூட அவர்களால் எழுகை பெறமுடியாதென்பது தெரிகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழர சுக் கட்சி ஒரு சில்லறைக் கட்சியல்ல எனப் பழம் பெருமை பேசி; கட்சியை இருந்த இடம் தெரியாமல் ஆக்கப்போபவர்களை என் செய் வோம் பராபரமே.

# பாடசாலைகளில் இடம்பெறும் நிதி சேகரிப்பு விசாரணைகள் நடத்தப்படும் – பிரதமர் ஹரிணி

பாடசாலைகளில் இடம்பெறும் நிதி சேகரிப்புத் தொடர்பில் துரித விசாரணைகள் நடத்தப்படுமென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தொடரில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 2026 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் சீர்திருத்தம், பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல், மனிதவள அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து பொது மக்களுக்கு தெளிவூட்டுதல், மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதமர் விளக்கினார்.

இது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளுக்காக உபகுழுக்களை நியமிப்பதற்கும் இதன் போது இணக்கம் காணப்பட்டது. (ம-7)

# அல் ஜசீராவுடன் மோதி சிதறினார்!

## ரணிலை கேலி செய்த பிமல் ரத்நாயக்க

பிரபல சர்வதேச ஊடகமான அல் ஜசீராவுடன் ரணில் விக்கிரமசிங்க முரண்பட்ட விடயமானது, அரசியல் தரப்புகளில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், தற்போதைய அரசாங்கமும் குறித்த சம்பவத்தை விமர்சனத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

குறித்த சம்பவத்தை சபைத் தலைவரான பிமல் ரத்நாயக்க நேற்றுப் பாராளுமன்றில் விமர்சித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வை ஒரு மோசமான செய்தியுடன் ஆரம்பிப்பதாக கூறிய பிமல், அண்மையில் கோர விபத்து ஒன்று இடம்பெற்றதாகக் கூறினார்.

அதில், ஃபெராரி சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பதாகக் கூறியவர், அல் ஜசீராவுடன் மோதி விபத்துக்குள்ளாகி சிதறிப் போயுள்ளதாகப் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

அதனால், அவரின் மூளைக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் எதனைப்பேச வேண்டும் என்று தெரியாமல் தேவையில்லாதவற்றை பேசிக்கொண்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், பாராளுமன்றில் போக்குவரத்து விவகாரங்கள் தொடர்பான விவாதத்தின் போது அதற்கான வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்வதாக சபைத் தலைவரான பிமல் ரத்நாயக்க கூறினார்.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மீண்டும் பாராளுமன்றம் வருவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"ஃபெராரி உரிமம் உள்ள ஒருவர் எல்-போர்ட் ஓட்டுநர்களுடன் நேரத்தை செலவிடுவதில்லை" எனப் பதிலளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# முகாமைத்துவ அதிகாரிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

சுமார் 7 வருடங்களின்பின்னர் அரச சேவையில் முகாமைத்துவ அதிகாரிகளை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகப் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக எதிர்வரும் மே மாதம் திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்படும் என அமைச்சின் செயலாளர்எஸ். ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டுக்காக நடைபெறவுள்ளபோட்டிப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் அதிகாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக 130,000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது. பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2200 பேர் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தற்போது முகாமைத்துவ அதிகாரிகளுக்கான 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டிலேயே இறுதியாக முகாமைத்துவ அதிகாரிகள் அரச சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மெய்வல்லுநர் போட்டி

முல்லைத்தீவு தென்னியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியானது இன்று சனிக்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் பாடசாலைமைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ.நவரெத்தினராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மல்லாவி ஆதார வைத்தியசாலையின் அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி மயூரன் லயந்தினி பிரதம விருந்தினராகவும் துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.யோகானந்தராசா, தென்னியங்குளம் கிராம சேவகர் செல்வி ந.கஜனி, கல்விக் கொடையாளர் இ.கிருஸ்ணகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

# துப்பாக்கிகள், கைக்குண்டுகள் தொடர்பில் தெரிவித்தால் வெகுமதி

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் குறித்து துல்லியமான தகவல்களைத் தருபவர்களுக்கு வழங்கப்படும் வெகுமதிப்பணத்தை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் திணைக்களம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் பதிவான குற்றங்களின் அடிப்படையில், நாட்டில் சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைவெடி குண்டுகள் தொடர்ந்து புழக்கத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அனைத்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தனியார் துப்பறியும் நபர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அது தொடர்பான வெகுமதி நிதியை அதிகரிக்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி தகவல் தெரிவிப்பவர்களுக்கு தற்போது T-56 துப்பாக்கிக்கு ரூ. 01 மில்லியன், கைத்துப்பாக்கிக்கு ரூ. 400,000 மற்றும் ரிவால்வருக்கு ரூ. 300,000 வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# வவுனியாவில் இளம் குடும்ப பெண் பாலியல் துஷ்பிரயோகம்

## குடும்பஸ்தர் கைது

வவுனியாவில்31 வயதுடைய இளம் குடும்பப் பெண் ஒருவரை மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 37 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவுப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.


வவுனியா பம்பைமடு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 31 வயதுடைய குடும்பப்பெண் ஒருவரை 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் அயலில் வசிக்கும் குடும்பஸ்தரான 37 வயதுடைய நபரொருவர் தனது வீட்டிற்கு அழைத்து குறித்த பெண்ணை மிரட்டி பாலியல்துஷ்பிரயோகம்செய்துள்ளார். இதனை அவர் வீடியோவாகவும் பதிவு செய்துள்ளார்.

குறித்த வீடியோவை வெளியிடுவேன் என மிரட்டி குறித்த பெண்ணை மீண்டும் பல தடவை அழைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இதனால் கர்ப்பமான குறித்த பெண் குழந்தை ஒன்றையும் பிரசவித்துள்ளார். இதனையடுத்து பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி குறித்த பெண் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் முள்ளியவளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு 2/3 அல்லது சுபோதினி அறிக்கை சம்பளம் கிடைக்குமா?



அன்பு ஜவஹர்ஷா

2016-2020 காலகட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் அடிப்படைச் சம்பளமானது 60 மாதங்களில் 107% அதிகரித்ததை இன்று பலர் மறந்து இருக்கலாம். அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் 2025.04.01 முதல் 2027.01.01 வரையிலான 20 மாத காலத்தில் அரசாங்க ஊழியர்களின் அடிப்படைச் சம்பளமானது 65% அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அரச தரப்பு என்றுமில்லாத அதிகரிப்பு என்று விளபம்பரப்படுத்தும் சந்தர்ப்பத்தில், சில தொழிற் சங்கங்கள் குறைந்த சம்பள அதிகரிப்பே கிடைத்துள்ளது என்று பிரசாரம் செய்து வருகின்றன.

2021, 2022, 2023 கால கட்டத்தில் ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் சுபோதினி குழு அறிக்கை சம்பளம் தமக்கு முழுமையாக வேண்டும் என்று நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். இடைக்கால நிவாரணமாக 2022.01.01 முதல் சம்பள அதிகரிப்பொன்று வழங்கப்பட்டது. இது சுபோதினி அறிக்கை சம்பளத்தில் 1/3 என்று கணித்து மிகுதி 2/3 என்றே போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

2025.04.01 கிடைக்கவுள்ள சம்பள அதிகரிப்புத் தொடர்பாக கணக்குப் பார்க்கும் சிலர், 2025 மார்ச் மாதம் வரை வழங்கப்பட்டு வருகின்ற 2024 ஜனவரி-மார்ச் வரையிலான நிலுவையையும் வைத்தே 2025 ஏப்ரல் சம்பளம் தொடர்பாக அதிகரிப்பு கிடைக்காது என்று சொல்லுகிறார்கள். வரவு செலவுத் திட்டம் இல்லாது விட்டாலும் ஏப்ரல் மாதத்தில் 5000 ரூபா நிலுவை கிடைக்காது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2020.01.01 முதல் இலங்கை நிர்வாக சபையின் III ஆம் IIஆம் I ஆம் வகுப்புக்குக் கிடைத்த சம்பளத்தை சுபோதினி முழு சிபாரிசு செய்து இருந்தது. 2025 வரவு- செலவு திட்ட அறிக்கையின் படி அது பின்வருமாறு அமைய வேண்டும். ஆரம்ப சம்பளமே இது.

| |
|---|
| III ஆம் வகுப்பு 82, 150/= |
| II ஆம் வகுப்பு 109, 090/= |
| I ஆம் வகுப்பு 133,570/= |

2025.04.01, 2026.01.01, 2027.01.01 ஆசிரியர் சேவைக்கு கிடைக்க்வுள்ள சம்பள படிநிலைகள் பற்றி இங்குள்ள அட்டவணைகள் மூலம் கணித்துக் கொள்ளலாம்.

2025.04.01 முதல் சுமார் 7500 ரூபாய் முதல் 50,000 ரூபாய் படி முதலாம் வகுப்பில் சேவைக் காலம் கூடிய ஆசிரியர்களுக்கு 65 000 /- வரை அடிப்படைச் சம்பள அதிகரிப்பு உள்ளது. இது கடன், படிகள், ஓய்வூதியம் போன்றவற்றில் பாரிய நன்மையைத் தரும் விடயமாகும்.

இவ்வாறு ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல அமைச்சுக்களின் செயலாளர் வரை உள்ள சிரேஷ்ட நிறைவேற்றுநர் தர ஊழியர்களுக்கும் கணிசமான அளவு அதிகரிப்புக் கிடைக்கவுள்ளது.

சில உயர் அதிகாரிகளுக்கு 20 மாதங்களின் பின்னர், அதாவது 2027.01.01 அன்று ஒரு இலட்சத்திற்கு மேலே அதிகரிப்பை பெற உள்ளார்கள்.

இந்த நிலையில் சுபோதினி அறிக்கைச் சம்பளம் சாத்தியமாகுமா என்ற கேள்வியை ஆசிரியர்கள் விரும்பாது இருந்தாலும் இங்கு இதுபற்றி விளக்க வேண்டியே உள்ளது.

1994.10.06 அன்று முதல் இலங்கை ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்ட போது இலங்கை நிர்வாக சேவைச் சம்பளமே ஆசிரியர் சேவையின் 2-II, 2-I, I ஆம் வகுப்பு ஆசிரியர்களுக்கு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டு இருந்தது. ஆனால் 1997.01.01 முதல் செயற்படுத்தப்பட்ட பி.சி.கபரேரா சம்பள ஆணைக்குழு அறிக்கையால் அந்த நிலை முற்றாக மாற்றியமைக்கப்பட்டு விட்டது. அதற்கு ஏராளமான காரணங்கள் அந்த அறிக்கையில் காட்டப்பட்டு இருந்தன. இவற்றை கருத்திற்கொண்டே பின்னர் வெளியிடப்பட்ட 15/2003, 09/2004, 06/2006, 03/2016 சம்பள சுற்றறிக்கைகளின் ஆசிரியர் சேவை சம்பளம் தீர்மானிக்கப்பட்டது. 03/2016 (iv) சம்பளச் சுற்றறிக்கையின் முலம் 2022.01 .01 முதல் இது சற்று மாற்றமடைந்தது.

இலங்கை ஆசிரியர் சேவையில் உயர் கல்வித் தகைமை கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள் அரைப் பங்கைவிட குறைவாக, அதாவது 1,20,000 பேர்களே இருப்பதால் அவர்கள் சேவைக்காலத்தை மட்டும் கருத்தில் கொண்டு இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு சம்பளத்தை சிபாரிசு செய்ய முடியாது என்பதே அரசு தரப்பு வாதமாகும்.

தொழில்வாண்மையுள்ள சேவையாகத் தரம் உயர்த்தப்பட்டால் மட்டுமே உரிய முறையான பதவி உயர்வுத் திட்டத்தின்படி இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்புக்குச் செல்கின்றவர்களுக்கு இவ்வாறு உயரிய சம்பளத்தைச் சிபாரிசு செய்ய முடியும் என்பது அரசு பக்க நியாயமாகும்.

ஆனால் கடந்த 30 வருட காலமாக இது தொடர்பான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் ஒன்றும் எடுக்கப்படவில்லை என்பதை மிகக்கவலையுடன் சுட்டிக்காட்ட வேண்டிள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவைக்கு தொழிற்றகைமை பெற்ற பட்டதாரிகளே போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்து முறையாக பதவி உயர்வுத் திட்டத்தின் மூலம் இதை மற்றைய நாடளாவிய சேவைகள் போன்ற மட்டத்திற்குக் கொண்டு வந்து, பெயருக்கு மூடிய சேவையாக இல்லாது உண்மையில் தரம் மிக்க தொழில்வாண்மை சேவையாக்கினால் மட்டுமே இத்தகைய போராட்டங்கள் வெற்றி பெறும். இது சாத்தியப்படும் வரை வெறும் கோசமாக மட்டுமே இக் கோரிக்கைகள் இருக்க முடியும்.

கடந்த காலங்களில் குறிப்பாக 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புத் தொடர்பாக நிறைய விமர்சனங்கள் இருப்பதும் இன்னும் தொண்டர் ஆசிரியர், பயிலுநர் ஆசிரியர் போன்ற முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதும் ஆசிரியர்களுக்கு எதிராக வைக்கப்படும் குற்றச்சாட்டுகளாகும்.

சம்பள மாற்றியமைப்பு -2025
இலங்கை ஆசிரியர் சேவை 3-11

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 | 2025.04.01 | மொத்த | 3- கழித்தல் | 2025.04.01 | 2026.01.01 | 2027.01.01 |
| அடிப்படைச் சம்பளம் | புதிய சம்பளம் | அதிகரிப்பு 2-1 | படிகள் 5,000.00+7,500.00 | அடிப்படைச் சம்பளம் | அடிப்படைச் சம்பளம் | அடிப்படைச் சம்பளம் |
| 31,490.00 | 53,060.00 | 21,570.00 | 9,070.00 | 46,711.00 | 49,885.50 | 53,060.00 |
| 445.00 | 800.00 | | | | | |
| 31,935.00 | 53,860.00 | 21,925.00 | 9,425.00 | 47,262.50 | 50,561.25 | 53,860.00 |
| 32,380.00 | 54,660.00 | 22,280.00 | 9,780.00 | 47,814.00 | 51,237.00 | 54,660.00 |
| 32,825.00 | 55,460.00 | 22,635.00 | 10,135.00 | 48,365.50 | 51,912.75 | 55,460.00 |
| 33,270.00 | 56,260.00 | 22,990.00 | 10,490.00 | 48,917.00 | 52,588.50 | 56,260.00 |
| 33,715.00 | 57,060.00 | 23,345.00 | 10,845.00 | 49,468.50 | 53,264.25 | 57,060.00 |
| 34,160.00 | 57,860.00 | 23,700.00 | 11,200.00 | 50,020.00 | 53,940.00 | 57,860.00 |
| 34,605.00 | 58,660.00 | 24,055.00 | 11,555.00 | 50,571.50 | 54,615.75 | 58,660.00 |
| 35,050.00 | 59,460.00 | 24,410.00 | 11,910.00 | 51,123.00 | 55,291.50 | 59,460.00 |
| 35,495.00 | 60,260.00 | 24,765.00 | 12,265.00 | 51,674.50 | 55,967.25 | 60,260.00 |
| 35,940.00 | 61,060.00 | 25,120.00 | 12,620.00 | 52,226.00 | 56,643.00 | 61,060.00 |
| 36,385.00 | 61,860.00 | 25,475.00 | 12,975.00 | 52,777.50 | 57,318.75 | 61,860.00 |
| 36,830.00 | 62,660.00 | 25,830.00 | 13,330.00 | 53,329.00 | 57,994.50 | 62,660.00 |
| 37,275.00 | 63,460.00 | 26,185.00 | 13,685.00 | 53,880.50 | 58,670.25 | 63,460.00 |
| 37,720.00 | 64,260.00 | 26,540.00 | 14,040.00 | 54,432.00 | 59,346.00 | 64,260.00 |
| 38,165.00 | 65,060.00 | 26,895.00 | 14,395.00 | 54,983.50 | 60,021.75 | 65,060.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025
இலங்கை ஆசிரியர் சேவை 3-1

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 34,160.00 | 57,860.00 | 23,700.00 | 11,200.00 | 50,020.00 | 53,940.00 | 57,860.00 |
| 525.00 | 940.00 | | | | - | - |
| 34,685.00 | 58,800.00 | 24,115.00 | 11,615.00 | 50,669.50 | 54,734.75 | 58,800.00 |
| 35,210.00 | 59,740.00 | 24,530.00 | 12,030.00 | 51,319.00 | 55,529.50 | 59,740.00 |
| 35,735.00 | 60,680.00 | 24,945.00 | 12,445.00 | 51,968.50 | 56,324.25 | 60,680.00 |
| 36,260.00 | 61,620.00 | 25,360.00 | 12,860.00 | 52,618.00 | 57,119.00 | 61,620.00 |
| 36,785.00 | 62,560.00 | 25,775.00 | 13,275.00 | 53,267.50 | 57,913.75 | 62,560.00 |
| 37,310.00 | 63,500.00 | 26,190.00 | 13,690.00 | 53,917.00 | 58,708.50 | 63,500.00 |
| 37,835.00 | 64,440.00 | 26,605.00 | 14,105.00 | 54,566.50 | 59,503.25 | 64,440.00 |
| 600.00 | 1,080.00 | | | 13,100.00 | 13,100.00 | 13,100.00 |
| 38,435.00 | 65,520.00 | 27,085.00 | 14,585.00 | 55,310.50 | 60,415.25 | 65,520.00 |
| 39,035.00 | 66,600.00 | 27,565.00 | 15,065.00 | 56,054.50 | 61,327.25 | 66,600.00 |
| 39,635.00 | 67,680.00 | 28,045.00 | 15,545.00 | 56,798.50 | 62,239.25 | 67,680.00 |
| 40,235.00 | 68,760.00 | 28,525.00 | 16,025.00 | 57,542.50 | 63,151.25 | 68,760.00 |
| 40,835.00 | 69,840.00 | 29,005.00 | 16,505.00 | 58,286.50 | 64,063.25 | 69,840.00 |
| 41,435.00 | 70,920.00 | 29,485.00 | 16,985.00 | 59,030.50 | 64,975.25 | 70,920.00 |
| 42,035.00 | 72,000.00 | 29,965.00 | 17,465.00 | 59,774.50 | 65,887.25 | 72,000.00 |
| 42,635.00 | 73,080.00 | 30,445.00 | 17,945.00 | 60,518.50 | 66,799.25 | 73,080.00 |
| 43,235.00 | 74,160.00 | 30,925.00 | 18,425.00 | 61,262.50 | 67,711.25 | 74,160.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025
இலங்கை ஆசிரியர் சேவை 2-11

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 39,175.00 | 66,880.00 | 27,705.00 | 15,205.00 | 56,236.50 | 61,558.25 | 66,880.00 |
| 825.00 | 1,490.00 | | | | - | - |
| 40,000.00 | 68,370.00 | 28,370.00 | 15,870.00 | 57,261.00 | 62,815.50 | 68,370.00 |
| 40,825.00 | 69,860.00 | 29,035.00 | 16,535.00 | 58,285.50 | 64,072.75 | 69,860.00 |
| 41,650.00 | 71,350.00 | 29,700.00 | 17,200.00 | 59,310.00 | 65,330.00 | 71,350.00 |
| 42,475.00 | 72,840.00 | 30,365.00 | 17,865.00 | 60,334.50 | 66,587.25 | 72,840.00 |
| 43,300.00 | 74,330.00 | 31,030.00 | 18,530.00 | 61,359.00 | 67,844.50 | 74,330.00 |
| 44,125.00 | 75,820.00 | 31,695.00 | 19,195.00 | 62,383.50 | 69,101.75 | 75,820.00 |
| 44,950.00 | 77,310.00 | 32,360.00 | 19,860.00 | 63,408.00 | 70,359.00 | 77,310.00 |
| 45,775.00 | 78,800.00 | 33,025.00 | 20,525.00 | 64,432.50 | 71,616.25 | 78,800.00 |
| 46,600.00 | 80,290.00 | 33,690.00 | 21,190.00 | 65,457.00 | 72,873.50 | 80,290.00 |
| 47,425.00 | 81,780.00 | 34,355.00 | 21,855.00 | 66,481.50 | 74,130.75 | 81,780.00 |
| 48,250.00 | 83,270.00 | 35,020.00 | 22,520.00 | 67,506.00 | 75,388.00 | 83,270.00 |
| 49,075.00 | 84,760.00 | 35,685.00 | 23,185.00 | 68,530.50 | 76,645.25 | 84,760.00 |
| 49,900.00 | 86,250.00 | 36,350.00 | 23,850.00 | 69,555.00 | 77,902.50 | 86,250.00 |
| 50,725.00 | 87,740.00 | 37,015.00 | 24,515.00 | 70,579.50 | 79,159.75 | 87,740.00 |
| 51,550.00 | 89,230.00 | 37,680.00 | 25,180.00 | 71,604.00 | 80,417.00 | 89,230.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025
இலங்கை ஆசிரியர் சேவை -1

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 56,770.00 | 98,580.00 | 41,810.00 | 29,310.00 | 78,063.00 | 88,321.50 | 98,580.00 |
| 1,630.00 | 2,940.00 | | | | - | - |
| 58,400.00 | 101,520.00 | 43,120.00 | 30,620.00 | 80,086.00 | 90,803.00 | 101,520.00 |
| 60,030.00 | 104,460.00 | 44,430.00 | 31,930.00 | 82,109.00 | 93,284.50 | 104,460.00 |
| 61,660.00 | 107,400.00 | 45,740.00 | 33,240.00 | 84,132.00 | 95,766.00 | 107,400.00 |
| 63,290.00 | 110,340.00 | 47,050.00 | 34,550.00 | 86,155.00 | 98,247.50 | 110,340.00 |
| 64,920.00 | 113,280.00 | 48,360.00 | 35,860.00 | 88,178.00 | 100,729.00 | 113,280.00 |
| 66,550.00 | 116,220.00 | 49,670.00 | 37,170.00 | 90,201.00 | 103,210.50 | 116,220.00 |
| 68,180.00 | 119,160.00 | 50,980.00 | 38,480.00 | 92,224.00 | 105,692.00 | 119,160.00 |
| 69,810.00 | 122,100.00 | 52,290.00 | 39,790.00 | 94,247.00 | 108,173.50 | 122,100.00 |
| 71,440.00 | 125,040.00 | 53,600.00 | 41,100.00 | 96,270.00 | 110,655.00 | 125,040.00 |
| 73,070.00 | 127,980.00 | 54,910.00 | 42,410.00 | 98,293.00 | 113,136.50 | 127,980.00 |
| 74,700.00 | 130,920.00 | 56,220.00 | 43,720.00 | 100,316.00 | 115,618.00 | 130,920.00 |
| 76,330.00 | 133,860.00 | 57,530.00 | 45,030.00 | 102,339.00 | 118,099.50 | 133,860.00 |
| 77,960.00 | 136,800.00 | 58,840.00 | 46,340.00 | 104,362.00 | 120,581.00 | 136,800.00 |
| 79,590.00 | 139,740.00 | 60,150.00 | 47,650.00 | 106,385.00 | 123,062.50 | 139,740.00 |
| 81,220.00 | 142,680.00 | 61,460.00 | 48,960.00 | 108,408.00 | 125,544.00 | 142,680.00 |
| 82,850.00 | 145,620.00 | 62,770.00 | 50,270.00 | 110,431.00 | 128,025.50 | 145,620.00 |
| 84,480.00 | 148,560.00 | 64,080.00 | 51,580.00 | 112,454.00 | 130,507.00 | 148,560.00 |
| 86,110.00 | 151,500.00 | 65,390.00 | 52,890.00 | 114,477.00 | 132,988.50 | 151,500.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025
இலங்கை ஆசிரியர் சேவை 2-I

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 47,425.00 | 81,780.00 | 34,355.00 | 21,855.00 | 66,481.50 | 74,130.75 | 81,780.00 |
| 48,760.00 | 84,180.00 | 35,420.00 | 22,920.00 | 68,136.00 | 76,158.00 | 84,180.00 |
| 50,095.00 | 86,580.00 | 36,485.00 | 23,985.00 | 69,790.50 | 78,185.25 | 86,580.00 |
| 51,430.00 | 88,980.00 | 37,550.00 | 25,050.00 | 71,445.00 | 80,212.50 | 88,980.00 |
| 52,765.00 | 91,380.00 | 38,615.00 | 26,115.00 | 73,099.50 | 82,239.75 | 91,380.00 |
| 54,100.00 | 93,780.00 | 39,680.00 | 27,180.00 | 74,754.00 | 84,267.00 | 93,780.00 |
| 55,435.00 | 96,180.00 | 40,745.00 | 28,245.00 | 76,408.50 | 86,294.25 | 96,180.00 |
| 56,770.00 | 98,580.00 | 41,810.00 | 29,310.00 | 78,063.00 | 88,321.50 | 98,580.00 |
| 58,105.00 | 100,980.00 | 42,875.00 | 30,375.00 | 79,717.50 | 90,348.75 | 100,980.00 |
| 59,440.00 | 103,380.00 | 43,940.00 | 31,440.00 | 81,372.00 | 92,376.00 | 103,380.00 |
| 60,775.00 | 105,780.00 | 45,005.00 | 32,505.00 | 83,026.50 | 94,403.25 | 105,780.00 |
| 62,110.00 | 108,180.00 | 46,070.00 | 33,570.00 | 84,681.00 | 96,430.50 | 108,180.00 |
| 63,445.00 | 110,580.00 | 47,135.00 | 34,635.00 | 86,335.50 | 98,457.75 | 110,580.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 வயது...

காரணமாக விபரீத முடிவெடுத்து இவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## 35 வருடங்...

இந்நிகழ்வில் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி, நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷ சூரியபெரும மற்றும் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,299)

## மயிலிட்டியில்...

நாதஸ்வர வித்துவானான செல்வராசா செல்வரட்ணம் (வயது-44) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7)

## காங்கேசன்...

பில் ஆராய்ந்தனர்.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணநாதன் இளங்குமரன் மற்றும் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, யாழ்.மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் சிமெந்து தொழிற்சாலையைப் பார்வையிட்டனர்.

1950களில் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை போர் காரணமாக 1990களில் மூடப்பட்டது. அன்று தொடக்கம் கடந்த 35 வருட காலமாக தற்போது வரையில் இயங்கா நிலையில் காணப்படுகிறது.

மீண்டும் தொழிற்சாலையை சிமெந்து உற்பத்திக்கென ஆரம்பிப்பதற்கு பல சவால்கள் உள்ள நிலையில் நேற்று அமைச்சர் குழாம் நேரில் சென்று அவை தொடர்பில் ஆராய்ந்துள்ளது.

சிமெந்துத் தொழிற்சாலையாக அல்லாமல் வடக்குக்குப் பொருளாதார பலன் தரக்கூடிய வேறு திட்டங்களை இங்கு செயற்படுத்தலாமா? என்பது பற்றியும் அதன்போது கலந்துரையாடப்பட்டது.

உரிய ஆய்வுகள், கலந்துரையாடல்களின் பின்னர் மக்களுக்கு பலனளிக்கும் வகையில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## அல் ஜசீரா...

ளார்.

அல் ஜசீரா நேர்காணல் குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிருப்தி தெரிவித்துள்ளார்.

நேர்காணல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, தொகுப்பாளர் மெஹ்தி ஹசனுடன் இணைந்த மூன்று குழு உறுப்பினர்களில் இருவர் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் என்று கூறினார்.

"மனித உரிமைகள் வழக்கறிஞரும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையருமான அம்பிகா சற்குணநாதன் இந்த விவாதத்தில் பங்கேற்பார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

எங்களுக்குள் சித்தாந்த வேறுபாடுகள் இருந்தபோதிலும் நான் அவரை அறிந்திருப்பதால் அதில் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

இருப்பினும் பின்னர் அவருக்குப் பதிலாக விடுதலைப்புலிகள் ஆதரவுக் குழுக்களுடன் தொடர்பு கொண்ட இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதை அறிந்தேன்," என்று கூறினார்.

"நான் உள்ளூர் ஊடகங்களுடன் பேசும்போது, அது நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது, எனவே நல்லது கெட்டது இரண்டும் வெளிவரும். இருப்பினும் அல் ஜசீரா இரண்டு மணி நேரம் என்னை நேர்காணல் செய்தது, ஆனால் ஒரு மணி நேரப் பகுதியை மட்டுமே வெளியிட்டது, அதில் பெரும்பகுதியைத் திருத்தியது" என்றும் அவர் கூறினார். (ம-7)

## கட்டிலிலிருந்து...

பெற்றுள்ளது.

இதில்நிலஅளவைத் திணைக்களத்தில் பணி[illegible] பெற்ற சி.[illegible] (வயது-60) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

வீட்டில் யாரும் இல்லாத சமயம் கட்டில் மேல் ஏறி அறை ஒன்றின் சுவருக்கு வர்ணம் பூசியபோது கட்டிலிலிருந்து தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## வடக்கில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரிய தொழிற்சாலைகளுக்கு முன்னால் நின்று பேசவேண்டிய நாங்கள் காடுகளுக்குள்ளே நின்று பேசவேண்டிய சூழ்நிலைக்கு இன்று தள்ளப்பட்டு இருக்கின்றோம்.

1990ஆம் ஆண்டுகளில் இவ்வாறானதொரு தொழிற்சாலை இருந்ததா? என்று பார்க்கின்றபொழுது ஆச்சரியமாக இருக்கின்றது. அவ்வாறான ஒரு மகிமையான தொழிற்சாலை இருந்த இடம்இன்று காடுகளால் மண்டிக் கிடக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகிய நாம் இந்தப் பிரதேசத்தை மாத்திரம் அல்ல நாட்டில் இருக்கின்ற அனைத்துத் தொழில்துறைகளையும் மேம்படுத்துகின்ற வேலையை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வேலையை முன்னெடுக்கும்போது வடமாகாணத்தில் கூடுதல் கவனத்தை செலுத்துகின்றோம்.

அந்தவகையில் முதலாவது வேலைத்திட்டமாக தமிழர்களுடைய அபிமானத்தை மீளக் கட்டியெழுப்புகின்ற காங்கேசன்துறை தொழில் பேட்டையைநவீனமயமாக எவ்வாறு கையாள்வது எவ்வாறு மீளப்புனர் நிர்மாணம் செய்வது என்பதை ஆராயவே மூன்று அமைச்சர்கள் கலந்துகொண்டு இந்த வேலைகளை ஆய்வு செய்துள்ளோம்.

இளைஞர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். இலங்கையில் வடமாகாணத்தை வேறொரு தரத்திற்கு உயர்த்துவதற்கான செயற்பாடுகளை எங்களுடைய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதற்காகக் கூடுதலான நிதி ஒதுக்கீடுகளையும் எங்களுடைய அரசாங்கம் செய்திருக்கின்றது.

நம்பிக்கை இழந்ததன் காரணமாக எங்களுடைய இளைஞர்கள் அனைவரும் நாட்டை விட்டு ஓடுகின்ற நிலைமையை நிறுத்த வேண்டுமென்றால் நாளைக்கு இந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற மனநிலை உருவாக வேண்டுமென்றால் நிச்சயமாக நாங்கள் கைத்தொழில் ரீதியாக முன்னேற்றம் அடைய வேண்டும்.

அதற்கான ஆய்வறிக்கையை சமர்ப்பிப்பதற்காகவும் அதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்குவதற்காகவும் விசேடமாக காங்கேசன்துறை, பரந்தன், ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, மாங்குளம் போன்ற பிரதேசங்களை முக்கோணத் திட்டத்தில் எதிர்வரும் காலத்தில் நவீன தொழில்நுட்ப வலயங்களாக மாற்றுகின்ற செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளோம் என்றார். (ம-7,33)

### மஹஜன சம்பத

திகதி 2025.03.07 சீட்டிழுப்பு இலக்கம் 5768

V 7 8 5 5 8 0

### அத சம்பத

V 5 5 8 0 சீட்டிழுப்பு இலக்கம் 0343

### தன நிதானய

திகதி - 2025.03.07 சீட்டிழுப்பு இலக்கம் - 1798

X 11 31 51 68 X — 74048

### மெகா பவர்

திகதி 07/03/2025 சீட்டிழுப்பு இலக்கம் 2116

C 08 24 42 62 75

### ஜய (JAYA)

திகதி 2025.03.07 சீட்டிழுப்பு இலக்கம் 036

Y 4 1 3 1

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4010 சீட்டிழுப்பு திகதி 07.03.2025

B 22 23 41 65 — B

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு திகதி 2025.03.07 சீட்டிழுப்பு இலக்கம் 1077

மிதுனம் 23 47 58 59 மிதுனம் — 52544 — 21

### உத்தியோகபூர்வ முடிவுகள்

07.03.2025 வெற்றி வாரம் 476

H 3 9 5 2 7 7 — 54593

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,040,305.60

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2742 சீட்டிழுப்பு திகதி 2025.03.07 தினம் வெள்ளிக்கிழமை

06 19 46 54 J

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,706,999.20

### சனிதா

திகதி 07.03.2025 வெற்றி வாரம் 4903

28 54 63 66 V

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,005,084.40 — 78383

### சசிரி

வெற்றி வாரம் 637 07.03.2025 வெள்ளிக்கிழமை

28 34 35

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4454 சீட்டிழுப்பு திகதி 07.03.2025 தினம் வெள்ளிக்கிழமை

06 25 47 53 சிம்மம்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.17,149,701.20 — 126881

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

O 24 02 06 09 20

1918 07.03.2025 வெள்ளிக்கிழமை

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.567,699,309.80

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

வெள்ளிக்கிழமை வெற்றி வாரம் : 2568 சீட்டிழுப்பு திகதி : 2025.03.07

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,716,524.00

09 26 57 59 K — 994028

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## UK BUSINESS VISITOR VISA

லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET

வர்த்தக கண்காட்சியில்..

உங்கள் வியாபாரத்தினை
(பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள்) நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த



- ✓ விசா விண்ணப்பங்கள்
- ✓ STALL BOOKING
- ✓ HOTEL BOOKING
- ✓ RETURN AIR TICKET
- ✓ பயண ஒழுங்குகள்

போன்ற அனைத்து சேவைகளுக்கும்...

தொடர்புகளுக்கு

**V2 TRAVELS** 0777068777

(C-2406)

## யாழ்ப்பாணம் - திருச்சி விமான சேவைகள்

யாழ் - திருச்சி விமானப் பயணச் சீட்டுக்கள்
33,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(901)

## வேலையாட்கள் தேவை

யாழ். சங்கானையில் திறக்கப்பட உள்ள அசைவ உணவகம் ஒன்றிற்கு சமையலாளர், ரொட்டி மேக்கர் (கொத்து, பிறைட் றைஸ்), உணவு பரிமாறுபவர்கள், உதவியாளர்கள், வேலையாட்கள் தேவை.
வெளி மாவட்டத்தவருக்கு தங்குமிட வசதியுண்டு.

(905)

**077 671 7990, 077 459 8329**
**077 637 3210**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி
Northen Central Hospital
க்கு அண்மையில்
6.5 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.

(3605)

**077 601 1135**

## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு முன்அனுபவமுள்ள வேலையாட்கள் (ஆண்கள்) தேவை. முன்அனுபவமுள்ளவர்களுக்கு 45,000/= - 55,000/= வரை சம்பளம் வழங்கப்படும்.
பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.
வயது எல்லை - 30 தொடக்கம் 45 வயது வரை.

(3596)

தொடர்பு: **077 560 4057**

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை வீதியில் 400m தூரத்தில் பிரதான வீதியில் இருந்து 50m தூரத்தில் இரண்டாவது காணியாக உள்ள 20 பரப்பு 6 குளி அளவுடைய மேட்டுக்காணி உடன் விற்பனைக்குள்ளது.

வீடு கட்டுவதற்கு உகந்த மேட்டுக்காணி 4 துண்டுகளாகப் பிரித்தும் வழங்கப்படும்

(904)

**077 4366 704 / 075 1640 104**

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித் தருகிறோம். அத்தோடு Pype lining, House wiring, painting செய்து தரப்படும்.

(3602)

தொடர்பு: **076 834 6136**

## தேவை

யாழ்ப்பாணம், மன்னார்
ஆகிய பிரதேசங்களில்
25 ஏக்கர் கடற்கரைக்காணி
33 வருடக் குத்தகைக்கு
ஒரு ஆரோக்கிய ரிசார்ட்டை
உருவாக்குவதற்காக
உடனடியாகத் தேவை.

(3601)

**070 319 8683**
**070 550 9228**
Land@thezenx.com

## காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில்
அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

(3583)

**074 38 25 961**
**076 91 97 566**
**077 46 87 645**

## பெண் பராமரிப்பாளர் தேவை

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் அம்மா ஒருவரைப் பராமரிப்பதற்கு அனுபவம் உள்ள பெண் பராமரிப்பாளர் உடன் தேவை. சம்பளம் பேசி நிர்ணயித்துக் கொள்ளலாம்.
தங்குமிடம், உணவு வசதி செய்து தரப்படும்.
ஆர்வம் உடையவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

(898)

whatsapp மூலமும் தொடர்பு கொள்ளலாம் **077 009 5706**

## வீடு வாடகைக்கு

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் சந்தியில் இருந்து 200m தொலைவில் நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.

(899)

Whatsapp:
**077 115 5909**

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 223/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 269/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 410/= |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1Kg றவை | - 282/= |
| 1Kg பொன்னி | - 240/= |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= |
| 1Kg கடலை | - 420/= |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 215/= |
| 10Kg விஜிதா நாடு | - 2920/= ~~3000/=~~ |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= |
| 1Kg சோயா | - 380/= |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= ~~560/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= ~~240/=~~ |

Max 01



400g Anchor 999/= ~~1050/=~~



அங்கர் யோகட் 52/= ~~80/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(901)

Happy Supermarket
0777 8080 30

## Schengen Visa


போலிகள் மூலம் உங்கள் பொன்னான காலம் மற்றும் பணத்தினை விரயமாக்காதீர்கள்

**Visit Visa**

- 99% கடந்த கால Success Rate
- 100 % Money Back gurantee
- நேர்மையான முறையில் சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்

**Schengen Visa** என்பது 29 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய **Schengen** பகுதிக்குச் செல்ல அனுமதிக்கும் அனுமதி

| | |
|---|---|
| Austria | France |
| Belgium | Germany |
| Czech Rupublic | Greece |
| Denmark | Hungary |
| Estonia | Iceland |
| Finland | Italy |
| Sweden | Switzerland |
| Latvia | Norway |
| Lithuania | Poland |
| Liechtenstein | Portugal |
| Luxembourg | Slovakia |
| Malta | Slovenia |
| Netherlands | Spain |





- ☑ 3 மாத காலத்திற்குள் செல்ல முடியும்.
- ☑ விரும்புவோர் முன்பதிவு செய்து நேரில் வரவும்.
- ☑ 13 வருட காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

**Winstar Consultants (Pvt) Ltd**
45, Vembadi Street, Jaffna.
T.P : 077 077 6979

(903)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் யாழ். நகர் பகுதி வெலிங்டன் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி செல்லும் பொன்னம்பலம் பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் சகல ஆவணங்களுடன் இரண்டு பரப்பு மூன்று குளி காணி விற்பனைக்கு உண்டு.
வீடுகள் அமைப்பதற்கும் ஏற்ற இடம்.

- ◆ யாழ். போதனா வைத்தியசாலை 100 மீற்றர்.
- ◆ கீல்ஸ் புட்சிற்றி 50 மீற்றர்.
- ◆ ஸ்ரான்லி றோட் வெலிங்டன் சந்தி 50 மீற்றர்
- ◆ 200 மீற்றர் யாழ். பஸ் நிலையம்.
- ◆ தரகர் தேவையில்லை.

(3606)

**076 755 8606, 077 638 5683**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.[illegible], பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.